# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண்.62/2022**

பெயர்: **முருகன்** நாள்: 27.11.2025

வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.1 – முருகன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம். 02:40</u>

நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிகள் இடங்கணசாலை கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பிய பி.வா.சா.1 அறிவிப்பின் பத்தி 5-ல் அ.வ.எண். 424/73 வழக்கின் முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் துணை முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ள விபரத்தை தெளிவாக குறிப்பிட்டிருந்த போதும் நான் வழக்குரை பத்தி 8-ல் தாவா சொத்துக்களை பொறுத்து எந்த வழக்கும் எந்த நீதிமன்றத்திலும் நிலுவையில் இல்லை என்று பொய்யாக குறிப்பிட்டு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பி.வா.சா.1 அறிவிப்பின் நகலை வழக்குரையுடன் 4 வது ஆவணமாக தாக்கல் செய்துள்ள நிலையில் தாவா.சர்வே எண். 573/1 ஐ பொறுத்து பிரதிவாதிகளின் தாயாருக்கு ஆதரவாக அ.வ.எண். 424/73 வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விபரம் எனக்கு தெரிந்தும் அதனை மறைத்தும் மோசடியாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகளின் தாயாருக்கு ஆதராவாக அ.வ.எண். 424/73 வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விபரம் பற்றி இந்த வழக்கில் கூறியிருந்திருந்தால் இந்த வழக்கை கோப்பிற்கு எடுத்திருக்கமாட்டார்கள் என்றால், சரியல்ல. பிரதிவாதிகளின் தாயாருக்கு ஆதரவாக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட நிலையிலும் பிரதிவாதிகள் தாவா சர்வே எண். 573/1-ல் குடியிருந்து அனுபவித்து வரும் நிலையிலும் பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு அந்நியர்கள் என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது போல் 28.04.2022 தேதியில் எவ்வித வழக்கெழுமூலம் இவ்வழக்கு தாக்கல் செய்ய ஏற்படவில்லை என்றும் கற்பனையான வழக்கெழுமூலத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால், சரியல்ல. பிரதிவாதிகள்

சட்டப்படிக்கு தாவா சர்வே எண். 573/1-ஐ அளந்து பாகம் பிரித்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க நடவடிக்கை எடுத்து I.A.No. 759/2018 நிலுவையில் இருந்து வரும் நிலையில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் ரோடு ஓரம் உள்ள பகுதியை அளந்து உட்பிரிவு செய்து அதனை விற்க போவதாக மிரட்டி சென்றுள்ளார்கள் என்று வழக்குரையில் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல. நான்தான் தாவா சொத்து சர்வே எண். 573/1-ஐ பொறுத்து தரப்பினர்களுக்கிடையே அளந்து பாகப்பரிவினை ஏற்படாத நிலையில் அ.வ.எண். 424/73 வழக்கு முதல்நிலை தீர்ப்பாணை பற்றி விபரம் தெரிந்து அதற்கு முரணாக செக்குபந்தி, விஸ்தீரணம் குறிப்பிட்டு மோசடி கிரையம் பெற்று உண்மை விபரங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் நல்லெண்ண கிரையதாரார் இல்லையென்றும் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்பதால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. பிரதிவாதிகளின் தாயாருக்கு ஆதரவாக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் நான் அந்த தீர்ப்பாணை என்னை கட்டுப்படுத்தாதோ என்றோ தாவா சொத்தின் உரிமையாளர் என்றோ விளம்புகை பரிகாரம் கேட்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே பிரதிவாதிகள் பி.வா.சா.1 அறிவிப்பில் என்னுடைய கிரைய பத்திரம் செல்லாத ஆவணம் என்று மறுத்துள்ள நிலையில் நான் என்னுடைய கிரைய பத்திரம் செல்லும் என்று விளம்புகை பரிகாரம் கோராததால் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. தாவா சர்வே எண். 573/1 ஐ பொறுத்து பாகம் பிரிக்கப்படாத நிலையில் மேற்படி நிலத்தின் கூட்டுப்பட்டாதாரர்களை சேர்த்து பரிகாரம் கோராத நிலையிலும் இவ்வழக்கு அவசியமான மற்றும் முக்கியமான தரப்பினர்களை சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால், சரியல்ல. தாவா சர்வே எண். 573/1-ஐ பொறுத்து துணைமுதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க தாக்கல் செய்த I.A. 759/2018 மனு நிலுவையில் இருந்த போது கிரையம் பெற்ற வழக்கிடை கிரையதாரரான நான் மேற்படி மனுவில் தரப்பினராக சேர்ந்து நான் கிரையம் பெற்ற சொத்தினை சட்டப்படி சுவாதீனம் பெற நடவடிக்கை எடுக்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. தாவா சொத்து பூஸ்திதியில் இல்லை என்றாலோ எனக்கு கிரையம்

செய்த நபர்கள் அவ்வாறான சொத்தை அனுபவிக்கவில்லை என்றாலும் அதனால் தான் தாவா சொத்து உட்பிரிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. உண்மை சங்கதிகளை மறைத்தும் தவறான சங்கதிகளை குறிப்பிட்டும் தாவா சர்வே எண். 573/1-ன் சட்டப்படியான, உண்மையான உரிமையாளர்களான பிரதிவாதிகளுக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 03:10</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.11.27 15:13:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.